# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆவணி 18
தம்மிழான் பிறை 29
ஞாயிறு (3-9-1978)
நிறுவியது 194
புத்தகம் 32
இதழ் 27

விலை சதம் 60


# பாடசாலைப் பகிஷ்கரிப்பில்

# ஒரு லட்சம் தமிழ் மாணவர்!

## 'நமோ நமோ' பாட ஆளே கிடையாத சூழ்நிலை செப்டம்பர் 7, 8-ல் பாடசாலைகள் வெறிச்சோடும்

புதிய சிங்கள ஏகாதிபத்திய ஒற்றையாட்சி அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் செப்டம்பர் 7ம், 8ம் திகதிகளில் தமிழ் ஈழத்திலுள்ள சுமார் ஒரு இலட்சம் தமிழ் மாணவ மாணவியர் பாடசாலைகளையும், கல்லூரிகளையும், பல்கலைக்கழக வளாகத்தையும் பகிஷ்கரிக்கவிருக்கிறார்கள். இந்தப்பாடசாலைப் பகிஷ்கரிப்பை ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள மாணவர் அமைப்புக்களும் தாமே முன்னின்று நடத்துவதில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றன.

தமிழ்ஈழத்தை தொடர்ந்தும் சிங்கள ஏகாதிபத்தியப் பிடிக்குள் வைத்துக்கொள்ள வகை செய்யும் புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வரும் செப்டம்பர் 7,8 ஆகிய திகதிகளில் தமிழ் ஈழத்திலுள்ள மாணவ மாணவியர் அனைவரையும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு தமிழீழ விடுதலைப் பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியுள்ளது தெரிந்ததே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த அறை கூவல் தமிழ் மாணவ மாணவியருக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஈட்டி முனைகள் மாணவ மாணவியரல்லவா? அதனால் அவர்கள் எழுச்சியுடன் இந்தப் பகிஷ்கரிப்பை நடத்தவிருக்கின்றனர். தமிழ் மாணவ மாணவியர் ஆங்காங்கே தாமாகவே கூடி திட்டமிட்டு பாடசாலைப் பகிஷ்கரிப்பை வெற்றிகரமாக நடத்தவிருக்கின்றனர்.

செப்டம்பர் 7ம் திகதி காலை ஒவ்வொரு பாடசாலையிலும் சிங்களசிறீலங்காவின் தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டுமென்றும், தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென்றும் அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து மாணவர்களும் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டுமென்றும் கல்வியமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அன்றைய தினமும், அடுத்த நாளான 8ம் திகதியும் தமிழ் ஈழத்தில் தமிழ் மாணவ மாணவியர் பூரண பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதால், சிறீலங்கா

—4-ம் பக்கம் பார்க்க

## சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவுக்கரம் நீட்டுகிறார் பிரஷ்னேவ்!

"இனவாதத்துக்கு எதிராகவும் சகல இனங்களின் சமத்துவத்துக்காகவும் போராடும் அனைத்து சக்திகளுக்கும் சோவியத் ரஷியாவின் ஆதரவுண்டு; தேசிய விமோசனத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்குமாகப் போராடும் மக்களுக்கு ஆதரவு வழங்குவது ரஷ்ய வெளிநாட்டுக்கொள்கையின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். தமது தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் மறுக்கவொண்ணா உரிமை ஒவ்வொரு இனத்துக்கும் உண்டு!"

—ஜெனிவாவில் நடைபெற்ற இனவாத எதிர்ப்பு சர்வதேசமாநாட்டுக்கு ரஷிய ஜனாதிபதி லியோனிட் பிரஷ்னேவ் அனுப்பிவைத்த செய்தி.



## அரசும் வாழ்வும் அருள்வாய் முருகனே!

வரம்தா நல்ல முருகா வரம்தா
வளம்தா தமிழர் வாழ்வில் நலம்தா

தமிழ் வேலவனே வருவாய் வருவாய்
தமிழ் ஈழத்தின் இறைமை தருவாய்
மீண்டும் எங்கள் நிலம் யாம் ஆண்டும்
மேன்மை கண்டும் வாழ்தல் வேண்டும்.

உமை பாலா மாலனே குகனே வேலா
நமை நாம் ஆளா நாள் ஓர் நாளா?

எந்நாள் வரைக்கும் இவ்வா றிருப்போம்!
எந்நாள் வரைக்கும் வசைகள் பொறுப்போம்?

அழுது அழுது தொழுதோம் ஐயா
ஐயா நின்றன் அருளே பொய்யா?

முரசும் படையும் உடையாய் குகனே
அரசும் வாழ்வும் அருள்வாய் உடனே

எழுவான் கதிரோன் கொடி ஆளும் நாள்
எந்நாள் ஐயா? அந்நாள் எந்நாள்?

தொல்லை களையும் நல்ல நாடா
துடியாய்த் துடித்தோம் ஓடி வாடா

வேலே வேலே வெற்றி வேலே
வெல்க தமிழர் தோளே தோளே.

காசி.ஆனந்தன்.

# கூட்டணியினர் ஹவானா மாநாட்டில் 'சிறீலங்கா'வை அவமதித்துவிட்டார்களாம்!

## யூ.என்.பி. குழுத்தலைவரின் ஆத்திரம்

கியூபாவின் தலைநகராகிய ஹவானாவில் அண்மையில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் கலந்து கொண்ட கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரை உள்ளடக்கிய ஐவர் குழு, 'சிறீலங்கா' அரசாங்கத்துக்கு அவமானமேற்படுத்தும் முறையில், திட்டமிட்டு அங்கு அபட்டத்தனமான பிரசாரத்திலீடுபட்டிருந்ததாகவும், இதுபற்றி அரசாங்கம் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்றும், அங்கு மாநாட்டில் யூ.என்.பி.க்குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற டாக்டர் காமினி விஜயசேகர என்பவர் கூறியிருக்கிறார்.

டாக்டர் காமினி விஜயசேகராவின் செவ்வி 25-8-78 டெயிலி நியூஸ் பத்திரிகையின் முன் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது—

"சிறீலங்கா" அரசுக்கு அவமரியாதை யேற்படுத்துவதற்காககூட்டணி சார்பில் வந்திருந்த ஐவர் குழு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் பிரசார இயக்கம் நடத்தியது. தீவில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்படுவதாகவும், எங்கும் மக்கள்பட்டினியால் வாடுவதாகவும், பொதுவாகவே தமிழர்கள் இனப்பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்படுவதாகவும், மாநாட்டில்கலந்துகொண்ட சர்வதேச இயக்கங்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்கள்மத்தியிலே பொய்ச் செய்திகளைப் பரப்பினர்! இது பற்றி அரசாங்கம் அதிக அக்கறையுடன் கவனிக்க வேண்டும்."

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

**தமிழ் நாட்டில் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் முரசு முழங்குகிறது; இந்தித் திணிப்பை மட்டும் இதுவரை எதிர்த்த தமிழக மக்கள் இப்போது இந்தியே வேண்டாம் என்று இன்றைக்கு முழங்குகின்றனர். செப்டம்பர் 10-ம் நாள் இந்தியை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. ஆதிக்க இந்தியை எதிர்த்து தமிழ்நாட்டுத் தலைநகரான சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி எழுப்பிய போர் முழக்கமே இங்கு இடம்பெற்றுள்ளது.**

—ஆர்



இந்தி எதிர்ப்புபோராட்டம் இன்று தொடங்குகிற போராட்டம் அல்ல. ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்கு முன்பு—1937—38—ம் ஆண்டிலேயே இந்தி எதிர்ப்பு அணி உருவாக்கப்பட்டது. அந்த அணியை உருவாக்கியவர் இந்த மண்டபத்திற்கு அருகிலே கல்லறையிலே உறங்கிக் கொண்டிருக்கிறார்.

தந்தை பெரியார்— பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் புலவர் பெருமக்களாக விளங்கிய நாவலர் பாரதியார்— மறைமலை அடிகளார்— இவர்கள் எல்லாம் போர்க் கோலம் பூண்டு, இந்தியை எதிர்க்க பேரணியைத் திரட்டினார்கள். நாற்பதாண்டுக்காலத்திற்கு முன்னால் அந்தப்போராட்டத்தில் ஆயிரம் பேர் தமிழ் காக்க இந்தியை எதிர்த்து சிறை

வாய்ப்புகள் கிடைக்கும்; அந்த நேரத்தில் இந்தி படிக்காமல் தமிழர்கள் ஏமாந்துவிட்டால்— பெரும் கேட்டிற்கு ஆளாவார்கள். ஆகவே இப்போதே தமிழ் நாட்டு மக்களைக் காப்பாற்ற இந்தி படிக்கச் சொல்கிறேன் என்பதாகும்.

ஆனால் அதே நேரத்தில் இநதியால் தமிழ் மொழி எந்த அளவிற்குக் கெடும் என்பதை அன்று ராஜாஜி அவர்கள் சிந்திக்கத் தவறினார். அதை உணர்த்தும் வகையில்தான் அன்றைக்கு தமிழர்கள் புலி, வில், கயல் என்ற மூன்று சின்னங்களும் பொறித்த கொடியைக் கொண்டு தமிழர் இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் நடத்திக் காட்டினார்கள்.

சையில் நடைபெற்ற இலக்கிய அணி கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது என்று இதுவரை சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் இந்தித் திணிப்பு இல்லை என்கிற பெயரால் வெவ்வேறு வழிகளில்— ஆனால் எல்லா வழிகளிலும் இநதி தமிழகத்தில் நுழைக்கப்படுகிறது. எனவே நம் முழக்கத்தை மாற்ற வேண்டும். இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்பதை மாற்றி— இந்தியை எதிர்ப்பது என்று முழக்கத்தை மாற்றவேண்டுமென்று சொன்னேன்.

இந்தியை எதிர்ப்பது என்றால் உத்தரப் பிரதேசத்திற்கும், மத்தியப் பிரதேசத்திற்கும் சென்று அங்கேயிருக்கிற இந்தி மொழியை எதிர்ப்பது என்று பொருள் அல்ல. தமிழகத்தில் எந்த முறையில்

தரணியில் குடந்தை இந்தி எதிர்ப்புப் போராட்டம். அது குறித்து அண்ணா அவர்கள் "ஆதிக்கத்தின் கனவு படமல்ல— பாடம்" என்ற நீண்ட பெரும் கட்டுரை எழுதினார். இன்று அதைப் படித்தாலும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை தமிழ்ப் பெருங்குடி மக்கள் அடைகின்ற அளவிற்கு அந்தக் கட்டுரை அமைந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

குடந்தை தெருக்களில் குருதி மழை பொழிந்தது, காவல் துறையினர் கழக வீரர்களை— அப்போது படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல பெரியார், அன்னை மணியம்மையார், அண்ணா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தஞ்சைத் தரணி அல்லோல கல்லோலப்பட்டது.

அதற்குப்பிறகு 1965-ஆம் ஆண்டில் நம்முடைய 40 ஆண்டுக்கால இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் உச்சக்கட்டத்தைத் தமிழகம் கண்டது. 1965-ல் நடைபெற்றது மொழிப் போராட்டம் என்று சொன்னால்— அந்த வார்த்தை முழுமையானதாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதை மொழிப்

போராட்டம் இல்லை என்று உரிமை கொண்டாடக் கடமைப் பட்டவன். திராவிடர் கழகம்— திராவிட முன்னேற்றக்கழகம் இல்லாமல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் இல்லை,

ஆகஸ்டு 15 விடுதலை நாள் விழா. இந்திய நாடு விடுதலை பெற்று விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. கொண்டாட்டங்களையும், குதூகலங்களையும் பற்றி மாலையில் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் செய்திகள் எல்லாம் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கும். ஆனால் இந்த விடுதலைநாள்

# தமிழ் மொழி காக்கத் தீக்குளித்த வரலாறு

# தமிழ் நாட்டின் தனி வரலாறு!

# இந்தித் திணிப்பை எதிர்த்து இரத்தம் சிந்தவும் தயார்!

## தி.மு.க. தலைவர் கருணாநிதி முழக்கம்!

சென்றார்கள் என்ற அந்த பழைய வரலாற்றை— நாற்பதாண்டுக் காலத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சியைக் கணக்கிட்டு இந்தி எதிர்ப்புப் போர் மீண்டும் தமிழகத்தில் தொடங்கப்படுமானால் எத்தனை ஆயிரம் பேர் சிறைக்குச் செல்லத் தயாராக இருப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

### இந்தியால் தமிழ் கெடும்

ஆயிரம் பேர் சிறைக்குச் சென்ற அந்தக் காலத்தில் இந்தியைக் கட்டாயமாகத் தமிழகத்தில் நுழைத்திடும் பணியைச் செய்தவர்— இந்தியே கூடாது— ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் Hindi never; English ever என்று பின்னால் சொல்லக் கூடிய அளவிற்கு தன்னை மாற்றிக் கொண்ட மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 1938-ல் சென்னை மாநிலத்தின் பிரதமர் என்கிற பொறுப்பில் இருந்த நேரத்தில்— கட்டாயமாக இந்தியைக் கொண்டு வந்தார். அப்போது அவர் சொன்ன காரணம் எப்படியும் டெல்லியில் இருப்பவர்களுடைய முயற்சியால் மத்தியில் அமைகிற அரசின் மூலைப்பான நடவடிக்கைகளால் இந்தியா முழுமையும் இந்தி பரவத்தான் போகிறது. அப்போது இந்தி படித்தவர்கள் —இந்தியில் பட்டம் பெற்றவர்களுக்குத்தான் வேலை

நான் அண்மையில் பத்திரிகையில் குறிப்பிட்டுக்காட்டியதைப் போல— அன்றைக்கு தேசியவாதிகளின் முழக்கம் எல்லாம் "தமிழ் வாழ்க— இந்தி ஒழிக" என்பதல்ல, இந்த முழக்கம் தமிழ் இயக்கத்தாரின் முழக்கமாக இருந்தது. ஆனால் தேசியவாதிகள் என்று சொல்பவர்களுடைய முழக்கம் எல்லாம் "தமிழ் வாழ்க— இந்தி பரவுக!" என்று இருந்தது. இந்தி பரவிட வேண்டும் என்கிற நோக்கம் அன்றைக்கும் இருந்தது. இன்றைக்கும் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அவர்கள் சொல்வதில்லை செயலில் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

### இந்தியே வேண்டாம்

இந்தியைத் திணிக்க மாட்டோம்; திணிப்பதே இல்லை என்றெல்லாம் ஆயிரக்கணக்கான உறுதி மொழிகளை அள்ளி அள்ளி வீசினாலும் கூட— மாநிலங்கள் அவையில் ஆனாலும்— இந்திய நாட்டுப் பிரதமர் நேருவானாலும், அவருக்குப் பிறகு வந்த சாஸ்திரியானாலும், அவருக்குப்பிறகு பொறுப்பேற்ற இந்திரா காந்தியானாலும்— இன்றுள்ள மொரார்ஜிதேசாய் ஆனாலும் இந்தியைத் திணிக்கமாட்டோம் என்ற வாக்குறுதியை வழங்குகிறார்களே யல்லாமல், இந்தியைப் பரப்புகின்ற முயற்சியில் மிக முனைப்பாகத்தான் இருக்கிறார்கள், ஆகவே தான் தனி

நுழைந்தாலும்— எந்த வழியில் புகுந்தாலும்— அது திணிப்பு என்கிற பெயரால் வந்தால்தான் எதிர்ப்போம் என்றல்ல; எந்தப் பெயரால் வந்தாலும் அதைத் தடுத்து நிறுத்தினால்தான் எதிர்காலச் சமுதாயத்திற்கு நாம் நன்மை செய்தவர்களாவோம். இல்லாவிட்டால் வருங்கால சந்ததி நம்மை சபிக்கும். அந்தச் சாபத்திற்கு ஆளாகாமல் இருக்க— அவர்கள் நம்முடைய கல்லறையைப் பார்த்து நீங்கள் வாழ்ந்த காலத்தில் அல்லவா, இந்தி நுழைந்தது. தமிழ் அழிந்தது என்று அழுது புலம்பாமல் இருக்க நாம் இன்றைக்கே தக்கது செய்தாகவேண்டும். அதற்கு வழி காட்டுகின்ற மாநாடாகத்தான் இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

### மொழிப்புரட்சி

1938-ல் ஆயிரம் பேர் சிறைச்சாலை சென்று— பெரியார் பெல்லாரி சிறையில் வைக்கப்பட்டு, அண்ணா அவர்கள் ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை ஏற்ற பிறகு, அரசினர் கொஞ்சம் வளைந்து, கட்டாய இந்தியில்லை என்ற அளவிற்கு ஆயிற்று. பின் 1947-ம் ஆண்டு அவினாசிலிங்கம் அவர்கள் கல்வியமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் மீண்டும் இந்தி நுழைக்கப்படுகின்ற நிலைமைகள் உருவாகி— அப்போது நடைபெற்றதுதான் தஞ்சைத்

புரட்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

மாணவர்கள், தமிழ்ப் புலவர்கள், ஆசிரியர்கள், தன்மான ரத்தம் ஓடுகின்ற தமிழர்கள் ஆங்காங்கு அந்தப் போர்க்களத்தில் குதித்தார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மாணவன் சாரங்கபாணி, மாணவன் ராசேந்திரன், அதைப் போலவே தங்களுடைய தேகங்களுக்கு தீவைத்துக் கொண்டு— தீப்பற்றி எரிகின்ற நேரத்திலும் "இந்தி ஒழிக! தமிழ்வாழ்க!" என்று முழக்கமிட்டார்கள். தமிழர் எண்மர். அப்படி தீக்குளித்து செத்த எட்டுத் தியாக மறவர்களைக் கொண்ட வரலாறு—65—ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு.

### எப்போது விடுதலை?

என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய அரசியல் பொது வாழ்வின் நுழைவே இந்தி எதிர்ப்புப் போரோடு கலந்ததாகும். திருவாரூர் பள்ளியில் நான் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த 1938-ஆம் ஆண்டிலேயே— பள்ளிக்கூட வாசலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட மறியலில் தமிழ்க்கொடி ஏந்தி இந்தி எதிர்ப்பு அணியில் ஈடுபட்டு இந்த பொது வாழ்க்கைக்கு வந்தவன். ஆகவே இந்தி எதிர்ப்பு என்பது என்னுடைய ரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. ஆகவே நான் இல்லாமல் இந்தி எதிர்ப்புப்

விழாவில் நாம் இங்கே கூடியிருப்பது தமிழுக்கு— தமிழர்களுக்கு இந்தியால் ஏற்பட்டிருக்கின்ற அடிமைத் தளையிலிருந்து எப்போது விடுதலை என்று கேட்கின்ற விடுதலை நாள் விழாதான் இந்த விடுதலைநாள் விழா!

ஏன் இதைச் சொல்லுகிறேனென்றால் இன்றைக்கு இந்தி படிக்காவிட்டால் என்னவாகும் தெரியுமா? இது தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி எண்ணுகின்ற— ஒவ்வொரு குடும்பத்தில் இருக்கிற படிக்கிற மாணவர்களுடைய உள்ளத்தில் ஏற்படுகின்ற கேள்வி. இந்தி படித்தால்தான் உங்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் இந்தி என்ற மொழியிலிருந்து வந்தது தான் இந்தியா என்று! நாட்டின் பெயரைச் சொல்கிற போதே அது கேள்விக் குறியாக இருக்கிறது. இந்தி...யா? என்கின்ற கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆனால் இந்தி என்கின்ற மொழியிலிருந்து இந்தியா வரவில்லை.

### இந்தியும் இந்தியாவும்

'இந்து' என்கின்ற மொழியிலிருந்து இந்தியன் வந்து, அந்த இந்தியன் என்கின்ற மொழியிலிருந்து இந்தியர்கள் வாழ்கிற நாடு இந்தியா என்று ஆயிற்றே தவிர, ரஷ்ய மொழியை பேசுவதால் ரஷ்யா என்று ஆன

—7-ம்பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

# செப்டெம்பர் ஏழு! நமக்கெங்கே வாழ்வு?

அன்பு நண்பா,

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த நம் அருமைத் தாயகத்தை — அவர் முந்தையர் ஆயிரமாயிர மாண்டு மகிழ்ந்து குலவி மகிழ்ந்திருந்த நம் தமிழீழத் திருநாட்டை—சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் வேட்டைக் காடாக—சுரண்டல் பூமியாக 'காலனி' நாடாக தொடர்ந்து வைத்திருப்பதற்கு சிங்கள சிறீலங்கா தன்னிச்சையாக உருவாக்கியுள்ள புதிய பாஸிஸ அரசியல் யாப்பு நடைமுறைக்கு வருகின்ற 1978 செப்டம்பர் ஏழாம் நாள் தமிழ் தேசிய இனம் மேலும் தாளும் நாள்—கொத்தடிமைத்தனம் மேலும் இறுகும் நாள்—சிங்களக்கோலேந்திகளின் வல்லாட்சி தமிழ்ஈழ மண் மீது எதேச்சாதிகாரமாக மீண்டும் திணிக்கப்படுகின்ற தீய நாள்—என்பதை விடுதலை வேட்கையும், வீரசுதந்திர உணர்வும் கொண்ட எந்தத் தமிழனுமே மறுக்க முடியாது!

தமிழ்ஈழ மக்களின் சம்மதமின்றி— தமிழ்ஈழ மக்களின் அபிலாஷைகளுக்கும் ஜனநாயகத் தீர்ப்புக்கும் விரோதமாக — கள்ளத்தனமாகவும் சட்ட விரோதமாகவும் தமிழ்ஈழ மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்படவிருக்கும் கபடத்தனம் நிறைந்த புதிய ஒற்றையாட்சி பாஸிஸ அரசியல்யாப்பு நடைமுறைக்கு வரும் செப்டம்பர் ஏழு வியாழன்—தமிழ் ஈழ மக்களைப் பொறுத்தவரையில் ஒரு கறுப்பு வியாழனே என்பதை விடுதலையை நேசிக்கும் எவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!

1972ம் ஆண்டு மே 22ம் திகதி—முந்திய சிங்கள வல்லாட்சி தமிழ் மக்கள் மீது திணித்த அரசியலமைப்பை நிராகரித்து, அதற்கு எதிராக எவ்வளவு தூரம் வீறு கொண்டெழுந்து போராடினோமோ, அதே உணர்வுடன் — இன்னும் சொல்லப்போனால் அதையும் விட மூர்த்தண்யமாக — இன்றைய சிங்கள வல்லாட்சி திணிக்கும் பாஸிஸ அரசியலமைப்புக்கு தமிழ் ஈழமக்கள் தமது வன்மையான எதிர்ப்பை வீறு கொண்டெழுந்து காட்டிட வேண்டிய நாள் தான் செப்டம்பர் ஏழு!

1972ம் ஆண்டு மே 22ம் நாள் — முந்திய சிங்கள ஏகாதிபத்திய குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த அந்த நேரத்தில்—தமிழர் உள்ளமெலாம் தீப்பிழம்பாகின: தமிழ் ஈழம் அரிமா என ஆர்த்தெழுந்தது; புலிநிகர் தமிழ் இளைஞர்கள் களத்தில் குதித்து, புதிய புறநானூறு படைத்தனர்; மே 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் கண்டியிலே சிங்களவர்கள் குடியரசைக் கொண்டாடிக் குதூகலித்தபோது — அக்கொடியரசை எதிர்த்து தமிழ் ஈழம் துக்கம் கொண்டாடியது; எங்கும் கருங்கொடிகள் பறந்தன; கடைகள் இழுத்து மூடப்பட்டு வீதியெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன; தங்கத்தமிழினத்தின் தன்மானப் படையான தமிழ் மாணவ சமுதாயம் அந்த மூன்று நாட்களும் தொடர்ந்து பாடசாலைகளை பகிஷ்கரித்து, தமிழர் போராட்டத்தில் புதிய சாதனையை ஏற்படுத்தியது; மாங்குயில்கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை என்று பண்ணிசைத்தபடி தமிழ் இளைஞர்கள் சிரித்த முகத்துடன் சிறைகளை நிறைத்தனர்; மே 24ம் நாள் ஆயுதம் தாங்கிய பொலிசார் சுற்றி வரப்பார்த்து நிற்க — பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் குமுறும் எரிமலை பாய்ச்சூழ்ந்து நிற்க—தமிழீழத் தந்தை செல்வா அவர்கள் அந்தக் குடியரசு அரசியல் சட்டப் பிரதிக்கு தீயிட்டார்; இந்த நிகழ்ச்சிகள் யாவும் இப்போது நம்மனதில் படமாக விரிந்து நம்மை ஒரு முறை சிலிர்த்தெழ வைக்கின்றன—இல்லையா நண்பா!

இது 1972-ம் ஆண்டிலே நாம் மேற்கொண்ட எதிர்ப்பு நிலை; முந்திய சிங்களக் குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளில் அதைச் சுட்டெரித்திட மூண்டெழுந்த தமிழின விடுதலைத் தீயின் வெப்பத்தின் அளவைக்காட்டும் நிலை; ஆனால் அன்றைய சூழ்நிலைக்கும், இன்றைய சூழ்நிலைக்குமிடையே வேறுபாடு நிரம்ப உண்டு!

அன்று சோசலிச முகமூடியின் கீழ் தமிழ்ஈழ மக்களின் தாயகம் பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டது; இன்று ஜனநாயகப் போர்வையின் கீழ் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் ஈழத்துக்கும் விஸ்தரிக்கப்படுகிறது; ஆனல் இந்த வேறுபாட்டையல்ல நான் இங்கு குறிப்பிடுவது—

1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்புச் சட்டம் வந்த நேரத்தில் — தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் மீட்பது தமிழர் கூட்டணியின் முடிவான இலட்சியமாக—நிலைப்பாடாக — இருக்கவில்லை; அந்த இலட்சியத்துக்கு தமிழ் மக்களின் அங்கீகாரம் பெறப்படவுமில்லை; அன்று கூட்டணி கோரியதெல்லாம் அந்த அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் சம உரிமைகளே; அவ்வுரிமைகள் மறுக்கப்பட்ட ஒரே காரணத்தினலே தான், மே 22ம் நாள் தமிழ் மக்கள் எதிர்ப்புக்களம் அமைத்தனர்; அன்றைய அரசியலமைப்புக்கு எரியூட்டினர்! இளைஞர்கள் சிறைப்பட்டனர்!

ஆனல் இன்று — ஆறு ஆண்டுகள் கழிந்து தமிழினத்தின் அரசியல் சிந்தனை வளர்ச்சியடைந்து ஒரு தெளிவான நிலைப்பாட்டை தமிழ் ஈழ மக்கள் ஏற்றுக்கொண்டு விட்ட சூழ் நிலையில்—சிங்கள நாட்டின் அரசியலமைப்பில் எமக்குச் சலுகைகளும், உரிமைகளும் கோருகின்ற நிலையில்— இவற்றுக்காக கையேந்துகின்ற தன்மையில் நாம் இல்லை! எமது தாய்த்திருநாடாம் தமிழ் ஈழத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் மீட்டு, அங்கு நமது சமதர்ம ஆட்சியை அமைப்பதொன்றேஇன்றுநமது இலட்சியமாகி விட்டது! அந்த இலட்சியத்துக்கு உடன்பாடாக இல்லாத அனைத்தும் இன்று நமக்குத் தூசுதான்! நம்மால் எதிர்க்கப்பட வேண்டியவைதான்!

சிங்களவர்களை நிரந்தர ஆளும் இனமாகவும், தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாகவும் வைத்திருக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பே தொடர்ந்து நீடிக்கிறது.

தமிழ் பேசும் மக்களைத் தாழ்த்தி அடிமைப்படுத்தியுள்ள கொடூரச் சட்டமான சிங்களம் மட்டும் சட்டத்தில் ஓர் அட்சரம்கூட மாற்றப்படவில்லை. அப்படியே எழுத்துக்கெழுத்து அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்து, கிறித்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு இல்லாத முதலிடம் சிறப்பிடம் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டு, அது அரசமதம் என்ற இடத்தைப் பெற்றுக்கொள்ளுகிறது!

வாளேந்திய சிங்கக் கொடியில் பௌத்த மத சின்னமாகிய நான்கு அரசு இலைகள் புதிதாக இடம்பெறப் போகின்றன!

தமிழ் ஈழப்பிரதேசங்கள், சிங்கள சிறீலங்காவின் ஆள்புலமாக பலாத்காரமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன;

தாய்மொழியே குழந்தைகளின் போதனமொழியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படை உரிமைக்கு உத்தரவாதம் இல்லை!

இவ்வாருக பாஸிஸக் கோலம் கொண்டுள்ள யூ. என். பி. யின் புதிய அரசியலமைப்பில் தமிழ்மொழிக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளனவாம்; முந்திய அரசியலமைப்பில் முந்திய சிங்கள அரசு வழங்கமறுத்த சில மொழிச் சலுகைகளை இன்றைய சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு வழங்கிவிட்டதாம்; என்றெல்லாம் யூ. என். பி. ஆட்சியின் ஊது குழல்கள் ஒசையிடுகின்றன; டமாரமடிக்கின்றன;

நான் முன்பு சுட்டிக்காட்டியபடி— 1972ம் ஆண்டு தமிழ் மக்கள் கொண்டிருந்த அரசியல் மனநிலையும், இன்று கொண்டிருக்கும் மனநிலையும் வேறு வேருனவை; அன்று உரிமைகளைக் கேட்டுப் பெறும் நிலையில்—உரிமைகளுக்காக பேரம் பேசும் நிலையில்—இருந்தோம்; இன்றோ மாற்ருனிடம் சலுகையும் உரிமையும் அல்ல நாம் கோருவது—நமது தமிழ் ஈழநாட்டின் சுதந்திரத்தை நிலைநாட்ட நாம் இன்று துணிந்துவிட்டோம்!

நதிகள் ஒருபோதும் பின்னேக்கிப் பாய்வதில்லை— அதுபோன்றே தமிழ் ஈழ சமுதாயமும் தனது இலட்சியத்திலிருந்து ஒருபோதும் பின்னேக்கிப் போகப்போவதில்லை!

அன்னியச் சிங்களவனிடம் மொழியுரிமை கோரியதும் — கொடியுரிமை கோரியதும் — சலுகைகள் பெற [illegible] யறிவிட் [illegible] அந்த வாய்ப்பை சிங்களவர்கள் தவறவிட்டுவிட்டார்கள்; இன்று தமிழ் தேசிய இனம் வேண்டிநிற்பது—நிலைநாட்டத் துடிப்பது—தமிழ் ஈழத்தின் இறைமையை— சுதந்திரம் ஒன்றைத்தான்!

1977 ஆடி 21 பொதுத்தேர்தலைத் தமிழ் ஈழ மக்கள் ஒரு பொதுசன வாக்கெடுப்பாகப் பிரகடனப்படுத்தி—அந்தப் பொதுத்தேர்தலில் தமிழ் ஈழத்தின் இறைமையையும் தன்னுதிக்கத்தையும் சுதந்திரத்தையும் மீட்டெடுப்பது ஒன்றே தமது அரசியல் நிலைப்பாடு என்பதை ஐயத்திரிபற ஜனநாயக ரீதியில் எடுத்துக் கூறிய பின்னரும்—அற்ப சலுகைகளை அந்நிய நாட்டுச் சிங்கள அரசு தமிழ் ஈழ மக்களுக்கு வழங்கியிருப்பதால் அதை நாம் ஏற்றிப் போற்றிட வேண்டுமென்று கூறுவோர் அரசியல் கபடத்தனம் நிறைந்தோராவர்!

கட்டை அறுத்தெறிந்து சுதந்திரமாக ஓடி ஆடித் திரியத்துடித்து நிற்கும் காளைமாட்டுக்கு அதன் வேகத்தைத் தணிப்பதற்கு கசாப்புக்கடைக்காரன் சிறிது தவிட்டைக்காட்டுவதுபோல, சிங்கள ஏகாதிபத்தியக் கொலைக்களத்திலிருந்து மீளத்துடிக்கும் தமிழ் ஈழ மக்களுக்கு மொழிச் சலுகைகள் என்ற தவிட்டைக்காட்டுகிறது சிங்கள வல்லாட்சி! இதுவே உண்மைநிலை!

எனவே நண்பா, ஜனநாயக ரீதியில் தமிழ் ஈழ மக்கள் முன்வைத்திருக்கும் அரசியல் நிலைப்பாட்டை அங்கீகரிக்க மறுத்து, தொடர்ந்தும் தமிழ் ஈழத்தை சிங்களமுதலாளித்துவத்தின் சுரண்டல் காடாக—சிங்கள ஏகாதிபத்தியத்தின் நவீன குடியேற்றநாடாக—ஆக்கி வைத்திருக்கின்ற புதிய அரசியலமைப்பை—தமிழ் ஈழத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் படைபலங்கொண்டு ஏறி மிதிக்கும் சிங்கள சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு அரசியலமைப்புச் சட்டத்தை—செப்டம்பர் 7ம், 8ம் நாட்களில் கூட்டணி காட்டும் வழியில் நின்று மிகவும் மூர்த்தண்யமாக எதிர்ப்பது என்கிற உறுதியை தமிழ் ஈழமக்கள் ஏற்கவேண்டும்!

தார்மீகம் பேசிக்கொண்டே தமிழ் ஈழத்தை அடக்கியாளும் ஜே. ஆரின் அரசியற் கொடுங்கோன்மை சாவதேச அரங்கில் துகிலுரியப்படவேண்டும்! அதற்கோர் அருமையான சந்தர்ப்பமே செப்டம்பர் ஏழு! ஆம், செப்டம்பர் 7ம் 8ம் நாட்கள்—நமது மனவுறுதியையும், சுதந்திரத்தின் மீது நமக்குள்ள வாஞ்சையையும் எடுத்துக்காட்ட வேண்டிய நாட்கள்!

தமிழ் ஈழத்தின் தன்மானக் குலக் கொழுந்துகளான நம் மாணவ மாணவியர் செப்டம்பர் 7, 8, ஆகிய இருநாட்களும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கவிருக்கிருர்கள்; சுதந்திரப் போராட்டப் பாதையில் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நமது மாணவச் செல்வங்களுக்கு பழகிப்போன ஒன்று; இதை அவர்களுக்குச் சொல்லியா கொடுக்கவேண்டும்? தாமாகச் செய்துகாட்டுவார்கள்—சிங்கள ஆட்சிக்கு சஞ்சல மூட்டுவார்கள்!

ஆட்சியாளர் தம் எடுபிடிகளும், ஏஜண்டுகளும் ஏற்பாடு செய்யும் விழாக்களிலும், கேளிக்கை நிகழ்ச்சிகளிலும் கொண்டாட்டங்களிலும் போட்டிகளிலும் தமிழ் ஈழ மக்கள் பார்வையாளர்களோ, பங்காளர்களாகவோ கலந்துகொள்ளமாட்டார்கள்! தமிழ்ஈழ அன்னை வேதனைக் கண்ணீர் வடிக்கையிலே விழாக்களா அவர்களுக்குத் தேவை?

செப்டம்பர் 7ம் நாள் சிங்கள சிறீலங்காவின் தேசியக்கொடி கொழும்பிலே ஏற்றப்படும் அதே நேரம்—நம் தாயின் மணிக்கொடி—தமிழீழத் தேசியக் கொடி—உதயசூரியன் கொடி—தமிழீழத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் தமிழீழத்தேசிய கீதம் முழங்க ஏற்றி வைக்கப்பட விருக்கிறது; அதைத் தாழ்ந்து பணிந்து வணங்கி தமிழீழம் காண உறுதி பூணுவார்கள் தமிழ் மான மறவர்கள்! மங்கையர்கள்!!

ஆம்—''மற்றைய நாட்டவர் முன்நின்றிடும் போழ்து மண்டுமெம் வெட்கத்தின்'' மீது ஆணையிட்டு—செப்டம்பர் 7ம், 8ம் நாட்களில் தமிழ் ஈழநாட்டின் சுதந்திரத்தை மீட்டெடுத்திட உறுதியேற்றிடுவோம்!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வேரொடு சாய்ப்போம்

"சாதி ஒழித்திடல் ஒன்று— நல்ல
தமிழ் வளர்த்தல் மற்ருென்று
பாதியை நாடு மறந்தால்— மற்றப்
பாதி துலங்குவதில்லை!
சாதி களைந்திட்ட ஏரி— நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே— நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!"

—மேற்கண்டவாறு மகாகவி பாரதி தம்மிடம் அடிக்கடி கூறியிருப்பதாக பகுத்தறிவுப்புலவன் பாவேந்தர் பாரதிதாசன் பாரதியாரைப் பற்றிய ஒரு கவிதையிலே கூறியிருக்கிருர்!

ஆம் பாரதிதாசனின் இந்த வரிகள் நூற்றுக்கு நூறு உண்மையானவை; தமிழ்த் தொண்டன் ஒவ்வொருவனதும் நெஞ்சில் இருந்து செயற்பட வேண்டியவை!

ஒரு மொழி வைத்து உலகாண்ட தமிழினம், இன்று தனக்கெனவோர் நாடின்றி நாதியின்றி தம்முள் பிளவுண்டு அடிபட்டு அழிந்துவருவதற்கும் அலைந்து திரிவதற்கும் ஒரே காரணம் தமிழ் சமுதாயத்தைப் பீடித்துள்ள சாதியென்று அழைக்கப்படும் தீராத தொழு நோயாகும். இந்தத் தொழு நோயை அகற்றுதவரை— வேரோடு கெல்லியெறியாதவரை தமிழினத்துக்கு மீட்சியில்லை— வாழ்வில்லை— வளமில்லை— தனக்கு விடுதலை கோருவதற்கு தார்மீக உரிமையுமில்லை!

தமிழினம் சாதி க வேண்டிய இலட்சியங்கள் எத்தனையோ இருக்க, தமிழ் மரபுக்கொவ்வாத சாதியைச் சாதித்து வருவதனுலேதான் சாதிக்க வேண்டிய மகோன்னத இலட்சியங்கள் பலவும் இன்று வெற்றிபெற முடியாத நிலையில் இருக்கின்றன.

சாதி வேறுபாடு காட்டுவது— தமிழ் மரபன்று; சாதியமைப்புக் கூடத் தமிழ் மரபன்று; பழந்தமிழர் வாழ்க்கையிலோ, அவர்கள் பின்பற்றிய சமய நெறியிலோ சாதிக்கு துளியும் இடமில்லை!

அப்படியிருந்தும் எப்படியோ புகுந்து விட்ட சாதி வேறுபாட்டுணர்வு தமிழனைத் தாழ்த்துகிறது; தமிழனைச் சில சமயங்களில் மிருகமாக மாற்றுகிறது; தமிழ்ப் பண்பையே குழிதோண்டிப் புதைக்க வைக்கிறது; தமிழனை மற்றவர்கள் அருவருப்புடன் பார்க்க வைக்கச் செய்கிறது! தமிழினத்தின் ஆணிவேரில் புகுந்து இனத்தின் எதிர்காலத்தை அரித்து வருகிறது.

இத்தகைய சாதி வேறுபாட்டுக்கும்— சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும், முற்றாகவும் முடிவாகவும் வேட்டு வைப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப்போது முழுமையாகவும், மும்முரமாகவும் அந்தரங்க சுத்தியுடனும் உழைத்து வருவது கண்டு மகிழ்ச்சியடைகிருேம.

விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழினம் — தமிழ் ஈழம் அமைக்கத்துடித்து நிற்கும் நமது தமிழ்க்குலம்— ஆவரங்கால் மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் அக்டோபர் 2க்கு முன் சாதியடிப்படையிலான பாரபட்சங்களைக் குழிதோண்டிப் புதைத்து விடுவதென்று உறுதி பூண்டெழ வேண்டும்! வேண்டாத சாதிச் சனியனைத் தொலைத்துவிட்டே இனிமறுவேலையென்று இளைஞர்கள் களத்திலிறங்க வேண்டும்!

சாதி ஒழிப்பில் நாம் வெற்றிபெற்று விட்டோமென்ருல்— விடுதலைப் போராட்டத்தில் பாதியைத்தாண்டி விட்டோம் என்பதே அர்த்தமாகும். சாதியொழிந்த சமுதாயமே விடுதலைக்கு வீறுடன் போர டும்; பாரதிதாசன் கூறியது போல 'தண்டமிழ் வாளினைத் தூக்கும்'! ஆகவே சாதியொழிப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதலாவதும், முக்கியமானதுமான அம்சமாகும்! அந்த அம்சம் இப்போது செயல்வடிவம் பெற்று வருகிறது.

ஆவரங்கால் மாநாட்டு தீண்டாமையொழிப்புத் தீர்மானத்தின் எதிரொலியாகத்தான் — பல நல்ல காரியங்கள் மளமளவென்று இப்போது நடைபெறத் தொடங்கியுள்ளன.

சிறுபான்மைத் தமிழர்களின் ஆலயங்களில் இதுவரை நாதசுரம் வாசிப்பதில்லையென்று இருந்து வந்த பழைய சம்பிரதாயத்தை மாற்றி —முதன் முதலாக நிச்சாமம் எனும் கிராமத்திலுள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கு சொந்தமான ஆலயமொன்றில் அண்மையில் 25 நாதசுரக்கலைஞர்கள் நாதசுரம் வாசித்திருக்கிருர்கள் என்ற செய்தி தேனுக இனிக்கிறது. சாதிவேறுபாட்டை இந்த வழியில் ஒழித்துக்கட்ட முன்வந்த இசைவேளாளர் சங்கத்தலைவர் தவில்மேதை திரு. சின்னராசா செயலாளர் ஞானசுந்தரம் பொருளாளர் நாதசுரமேதை என். கே. பத்மநாதன் ஆகியோர் இதற்காக நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நாதஸ்வரக்கலைஞர்கள் இவ்வாறு தாமாகவே முன்வந்து சாதிப் பாகுபாட்டை ஒழித்துக்கட்டியதுபோலவே— தமிழ் மக்கள் ஒவ்வொரு துறையிலும் தாமாகவே முன்வந்து சாதியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிருேம். அரசாங்கம், பொலிஸ், சட்டம், நீதிமன்றம், சிறைத்தண்டனை என்று இப்படி பிரச்சினைகளை வளர்க்க இடம்தராமல், தமிழினத்தின் மேன்மையைக் கருதி, ஒவ்வொரு தமிழனும் தானுகவே முன்வந்து எங்கெங்கு சாதி வேறுபாடு தாண்டவமாடுகிறதோ அங்காங்கு அதையெல்லாம் துடைத்தெறிய நடவடிக்கையெடுப்பானுக. இது ஒரு புனிதமான கடமையாகும்!

இந்தக்கடமையை தாமதமின்றிச் சரிவரச்செய்து முடித்து சாதியை வேரோடு சாய்த்து ஈழத்தமிழன் விடுதலைக்குத் தன்னைத் தயார் படுத்திக்கொள்வானுக!

# பாடசாலை பகிஷ்கரிப்பில் ஒரு இலட்சம் தமிழ் மாணவர்

—1-ம் பக்கத் தொடர்

தேசியக் கீதம் பாடுவதற்குக் கூட ஆள் கிடைக்காத நிலை ஏற்பட்டிருப்பதாகப் பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

செப்டம்பர் 7,8ம் திகதிகளில் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதையொட்டி பாடசாலை மட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் கலைவிழாக்களிலும் பார்வையாளர்களாகவோ, பங்காளர்களாகவோ கலந்து கொள்வதில்லை யென்று தமிழ் மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.

### பாண்ட்வாத்தியம் வாசிக்கமறுப்பு!

அரசியலமைப்புக் கொண்டாட்டங்களுக்கு பாண்ட் வாசிக்கமுடியாதென யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளின் மாணவிகள் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்களாம். தமிழ் மாணவிகள் மாவீரன் சிவகுமாரனின் வீரத்தங்கையர்கள் அல்லவா? அவர்கள் அந்நிய சிங்கள ஆட்சிக்கா 'பாண்ட்' வாசிப்பார்கள்?

தமிழ் ஈழத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ் ஈழத்தின் சுதந்திரக் கொடியான உதய சூரியன் கொடி, தமிழ் ஈழதேசிய கீதம் முழங்க அந்தந்த தொகுதி பா. உ. வினுல் ஏற்றிவைக்கப்பட விருக்கிறது. அந்த நிகழ்ச்சியில் தமிழ் மாணவ மாணவியர் பங்கு கொள் வார்கள் என்று தெரிகிறது.


### அணிவகுப்புக்கு செல்லமறுப்பு

கொழும்பில் நடைபெறவிருக்கும் பாடசாலைமாணவ மாணவிகளின் அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கு தமிழ் ஈழத்திலிருந்து தன்மானமுள்ள தமிழ் மாணவ மாணவிகள் எந்தப்பாடசாலையிலிருந்தும் செல்ல மாட்டார்கள்.

29-8-78 வீரகேசரியில் வெளிவந்ததுபோல தன்மானம் மிகுந்த மன்னூரிலிருந்து எந்த ஒரு மாணவனும் கொழும்பில் நடைபெறும் பாடசாலை மாணவர் அணிவகுப்புக்கு செல்லப்போவதில்லை யென்று மன்னூர் பா. உ. திரு. சூசைதாசன் தெரிவித்தார்.

அரசமைப்புக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அஞ்சலோட்டம் மூலம் 'நட்புறவுச் சுடர்' கொண்டு கொழும்புக்கு ஓடி வருவதற்கு பருத்தித்துறையில் ஆளே கிடைக்கவில்லையாம். இதனுல் யாரையாவது பிடித்து இந்தவேலைக்கு கூலிக்கு அமர்த்தவும் இறுதி நேர முயற்சிநடக்கிறதாம்.

தமிழ் ஈழத்தில் செப்டம்பர் 7, 8ம் நாட்களில் பாடசாலைகள் முழுமையாக வெறிச் சோடிக்கிடக்கும்; ஆசிரியர்களும், அதிபர்களும் மட்டுமே அங்கு சென்று இலையான் அடித்து கொட்டாவிவிட்டுத் திரும்புவார்கள் என்பது இப்போதே தெரிய ஆரம்பித்துவிட்டது. இம்முறை பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிபெறுவதும் உறுதியாகிவிட்டது.



## வரோதய முத்து

— மலைமதிசந்திரசேகரன் —

தங்கத் தலைவர் இங்கே பிறந்தார்
தண்டமிழ் காக்க சூளுரைத்திட்டார்
மங்களமான அன்னவர் மறைவு
மக்களின் நெஞ்சில் மறக்கொணுப்பிரிவு

ஐம்பத்திரண்டில் திருமலை மண்ணின்
ஆற்றலின் உருவாய் அவர் ஒளிர்ந்திருப்பார்
தம்பதம் காண இறைவனும் எண்ணி
சாவினில் அவரை ஏன் அழைத்திருப்பான்?

எத்தனை தலைவர்கள் இத்தரை வந்தார்
அத்தனை பேரிலும் 'வரோதயர்" முத்து
செத்திலர் தமிழீழ ஆட்சிக்கு ஆகி
சிறப்புடன் தலகியே காலமாய் ஆவார்

ஐயாவின் இலட்சியம் என்றுமே வாழ
அன்புள்ள தமிழர்கள் ஒன்ருக உழைப்போம்
நையாண்டி செய்யும் போலிகள் கலங்க
நந்தமிழ் ஈழம் நிச்சயம் மலரும்.

### கூட்டணியினர் ஹவா..

—1-ம் பக்கத் தொடர்

இவ்வாறு கூறியுள்ள டாக்டர் விஜயசேகரா கூட்டணித் தூதுக்குழுவினரைத் தவிர—பல்வேறு அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட ஏனைய கட்சிகளான ஐ. தே. கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிட் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுனை ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாநாட்டில் 'பண்பாடு' பாதுகாத்ததாக பாராட்டுத்தெரிவித்திருக்கிருர்.

### இராசவரோதயம் நினைவுக்கூட்டம்

இடம்:- த.வி.கூ. தலைமைப் பணியகம்.

காலம்:- 2.9.78 சனிக்கிழமை மாலை 6.30மணி.

தலைவர்:- திரு. வெ. யோகேஸ்வரன் பா.உ.

தலைப்பு:- "திருமலை தந்த தலைவன் அமரர் ந.இ. இராசவரோதயம்."

உரை:- (1) கவி. காசி சுந்தரம்பிள்ளை. (2) டாக்டர் ச.அ. திருமலிங்கம்(முன்னுள் மாநகர முதல்வர்) (3) சுதந்திரன் ஆசிரியர்— கோவை மகேசன், (4) ஈழவேந்தன்— த.வி.கூ. கொழும்புக்கிளைத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாட்டுவிடுதலைக்கு தம்மை அர்ப்பணிப்பவர்கள் பணக்கார வர்க்கம் அல்ல; பஞ்சை பராரிகளே!

## மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையை எந்த நிமிடத்திலும் நான் மறந்தவனல்ல'

### பிறந்தநாள் விழாவில் அமிர்தலிங்கம் உணர்ச்சியுரை!

"எந்த ஒரு நாட்டு விடுதலைப் போராட்டத்தை யெடுத்துப்பார்த்தாலும். அந்த நாட்டின் விடுதலைக்கு பஞ்சை பராரிகளே — பாட்டாளித் தோழர்களே முன்னின்று போராடியிருக்கிறார்களே தவிர— பணம் படைத்தவர்கள் போர்க்களத்துக்கு வரமாட்டார்கள். இழப்பதற்கு எதுவும் இல்லையென்ற நிலையில் இருக்கும் ஏழைகளே இன விடுதலைப்போரில் முன்நிற்பார்கள். தமிழ் ஈழ நாட்டின் விடுதலைப் போராட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல; தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு இன்று போராடும் தம்பிமார் பலரும் குடிசைகளிலிருந்து புறப்பட்டோரே தவிர— கோடீசுவரர் வீட்டுப்பிள்ளைகள் அல்ல அவர்கள். இந்த உண்மையை நான் உணர்வேன். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு தமிழ்த் தொழிலாளர்களையும் சமதர்மச் சிந்தனையுள்ளவர்களையும் சார்ந்ததே!"

—இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 27-8-78ல் நடைபெற்ற அமிர் பிறந்த தின விழாவில் வாழ்த்துரை வழங்கியோருக்கு நன்றி தெரிவித்துப்பேசிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த விழாவுக்கு யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் வேண்டுகோளின் பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. தலைமையேற்ருர்.

சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினுர். திரு. வ. பொன்னம்பலம் எம். ஏ. அமிர் பிறந்தநாள் விழா மலரை வெளியிட்டு வைத்து உரைநிகழ்த்தினுர். திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

"நான் எனக்கெனப் பணத்தையோ, சொத்துக்களையோ சேர்த்துவைத்திருப்பவன் அல்ல; எனது முப்பது ஆண்டுகாலப்பொது வாழ்வில் நான் சேர்த்து வைத்திருக்கிற ஒரே செல்வம் மக்களின் மனப்பூர்வமான அன்புதான். அந்த அன்பிலேதான் இதுவரை இங்கு மிதந்தேன்,

"இந்த விழா இங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதையும், அதையொட்டி இங்குபேசிய கவிஞர் காசிஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பேசியதையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்காவிடின், எமக்கு எதிரானவர்கள் எவ்வளவு அற்பமானவர்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாமற் போயிருக்கும்.

"நான் வேகமாக இயங்குவது போதாது என்று கருதும் இளைஞர்களுக்கு என்னைக் கண்டிக்கஉரிமையுண்டு, ஆனுல் அவர்கள் களத்தில் நிற்பவராக இருக்கவேண்டுமே தவிர சந்துமுனையில் சிந்துபாடுபவராக இருக்கக்



கூடாது. களத்தில் நிற்பவனுக்கே கண்டிக்கவும் உரிமையுண்டு. தமது வாழ்வையே தமிழ் ஈழப் போராட்டத்துக்கு அர்ப்பணித்து, எங்கெங்கோ எப்படி எப்படியெல்லாமோ வாழும் தீவிர இளைஞர்கள் என்னைக் கண்டித்தால் அதை நான் தலைகுனிந்து கேட்பேன்.

"துரையப்பா கொலைவழக்கில் தூக்குக் கயிற்றுக்கு கழுத்து நீட்டத் தயாராக இருந்த சந்ததியார் போன்ற இளைஞர்கள் என்மீதுகுற்றம் சுமத்தினுல், அதை நான் சிரம்தாழ்த்திக் கேட்பேன்.

நான்கு, ஐந்து ஆண்டு காலம் காராக்கிருகத்தில் வாடிவிட்டு வந்த காசி ஆனந்தன், சேனாதிராசா, வண்ணை போன்ற இளைஞர்கள் கூறும் கருத்துக்களுக்கு நான் நிச்சயம் செவிமடுப்பேன். ஆனுல் எங்கோ யாரோ அனாமதேயங்கள் வெளியிடும் துண்டுப் பிரசுரங்களுக்கா நான் பயப்படுவேன்?

நான் பொது வாழ்வில் என்று ஈடுபடத்தொடங்கினேனே அன்று முதல் எத்தனையோ பயமுறுத்தல்களையும் மிரட்டல்களையும் பார்த்து விட்டேன். உயிருக்கு அஞ்சியவர்கள் பொது வாழ்வில் ஈடுபட முடியாது.

இன்றைய தினம் தம்பிமார் போராட்டம் போராட்டம் என்று துடிக்கிருர்கள். முன்பு நாம் நடத்தியது போல சிறு சிறு போராட்டங்களால் இனிப்பயன் இல்லை. தமிழ் ஈழ நாட்டை மீட்பதையே நம் முடிந்த முடிபாக ஏற்றுக்கொண்டு விட்ட பிறகு— ஒரு முழு அளவிலான யுத்தம் ஒன்றின் மூலம்தான் அந்த விடுதலையை அடையலாமே தவிர வேறு சிறிய போராட்டங்களால் பயன் இல்லை; அதற்குரிய காலம் கனிய வேண்டும்; நமக்கு உதவக் கூடிய உலக நண்பர்களைத் திரட்ட வேண்டும்.

"இன்று நாம் ஆரம்பித்திருக்கும் தமிழ் மண்காக்கும் இயக்கம், எதிர்கால விடுதலைப் போராட்டத்தின்முதல் நடவடிக்கையாகும், எனவே நமது மண்ணை எப்படியும் பாதுகாத்து— சுதந்திர ஈழத்தை அமைக்கும் போது அதையொரு முழுமை பெற்ற ஈழமாக அமைக்க வேண்டும். அதற்காக உழைப்பதே இளைஞர்களின் உடனடிப்பணியாகும்.

"நீங்கள் என்மீது கொண்டிருக்கும் பற்றுப்பாசத்தையும் நம்பிக்கையையும் நான் அறிவேன். நீங்கள் என்னை நம்பிக்கைச்சுடர் என்று அழைத்தீர்கள். அந்த நம்பிக்கைச்சுடர், நிச்சயமாக தமிழ் மக்களின் வாழ்வுக்காக— தமிழ் ஈழ விடுதலைக்காக— என்றென்றும் ஒளி தந்து கொண்டேயிருக்கும் என்ற உறுதியை உங்களிடத்திலே தருகிறேன்.

"நான் செப்டம்பர் 8ம் திகதிக்குப்பின் இரண்டு மாதம் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்யவிருக்கிறேன். அச்சமயம் இயக்க நடவடிக்கைகளையும், எனது பாராளுமன்றக் கடமையையும் நண்பர் சிவா நிச்சயமாகத் திறமையாக கொண்டு நடத்துவார்!"

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேசினுர்.

விழாவில் திருவாளர்கள் க. துரைரத்தினம் பா.உ. பண்டிதர் கா பொ. இரத்தினம் பா.உ, த. இராசலிங்கம் பா.உ., பி.எஸ். குசைதாசன் பா.உ, கவிஞர் காசி ஆனந்தன், ஈழவேந்தன் மாவை சேனாதிராசா, கோவை மகேசன், பண்டிதர் ப. இராசகுரு, சகோதரர் பாலகிருஷ்ணன், திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை, சங்கானை அம்மா ஆகியோர் உரையாற்றினர்;

## சிகரெட்டை கைவிட்டார் நவரத்தினம்!

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் இப்போது சிகரட் புகைப்பதை அறவே கைவிட்டுவிட்டார். சிகரெட் புகைப்பதால் மாதாமாதம் செலவாகும் பணமான நூறு ரூபாவை, அண்மையில் விபத்தொன்றில் காலமானவரும் இலங்கை பஸ் தொழிலாளர் கழக உறுப்பினரும், கூட்டணி ஆதரவாளரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவருமான திரு.சண்முகராசாவின் குடும்பத்துக்கு திரு.நவரத்தினம் இப்போது வழங்குகிருர்.

## தேவராஜா மீண்டும் தலைவர்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவிர்த்திச் சங்கத்தின் இருபத்தொராவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 26.07.78 புதன்கிழமை தலைவர் திரு. பொ. தேவராஜா அவர்கள் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக யாழ். உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு.அ.மகாதேவா, யாழ் வைத்திய அதிபர் திரு.வி.பி. அமரசிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டார்கள்.

நடப்பு வருட உறுப்பினர்களாக திரு.பொ.தேவராஜா தலைவர், திரு. கே. செல்வராஜா உபதலைவர், திரு. சி. செல்லத்துரை காரியதரிசி திரு.ச. பாலசுப்பிரமணியம். தனாதிகாரி, திரு. எவ். சந்தியாப்பிள்ளை உபதனாதிகாரி. நிர்வாக அங்கத்தவர்களாக திரு.வை. சிவலிங்கம், திரு.ச. சத்தியமூர்த்தி, திரு. அ.பி. சந்திராப்பிள்ளை, திரு. வை. வே. கந்தசாமி திரு. எஸ். இராசாதுரை, திரு. சி. சண்முகதாஸ், செல்வி. வை. தெய்வநாயகி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்,

● Now on Sale

## The Sansoni Commission Evidence

A WEEKLY PAPER

Every Saturday beginning August 19.

A Full, authentic account of the proceedings containing material hitherto not published, and not likely to be published in the future in any other medium. Please reserve your copies with your news agent to ensure your regular reading.

Price Re. 1/- only

News Agents please contact:-

Manager,
Ceylon News Papers Ltd.
194A, Bandaranayake Mawathe,
Colombo-12.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| அப்பாத்துரை | சிவசுப்பிரமணியம் |
| நித்தியானந்தன் | மகாகுலரமணி |
| பயிர் செய்கை உத்தியோகத்தர் | (ஆசிரியை) |

காலம்: ஆவணித்திங்கள் 22ம்நாள் (07-09-78)
நேரம்: காலை 8-47க்கும் 10-31க்குமிடையே வரும் துலாலக்கின சுபவேளை
இடம்: வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் திருக்கோணமலை.

வரவேற்புபசாரம்: 10-9-78 ஞாயிறு மாலை
(மணமகன் இல்லத்தில்)

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

| | |
|---|---|
| சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர், | செ. அப்பாத்துரை குடும்பத்தினர், |
| 15/1, கந்தசுவாமி கோவிலடி, | 23, ஐயனார் கோவிலடி. |
| வில்லூன்றி, | யாழ்ப்பாணம். |
| திருக்கோணமலை. | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியில் தமிழன் நம்பிக்கெட்ட வரலாறு!

## பழைய சரித்திரத்தை ஒருபோதும் மறவாதீர்!

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் அமைச்சர் பதவிகளை ஏற்பதன் மூலம் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாதா என்ற மன உளைச்சல் ஒரு சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாறே அதற்கு எப்போதும் விரோதமாக இருந்து வந்துள்ளது.

சோல்பரி ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஆணித்தரமாக எதிர்த்து நின்ற நேரத்தில் அதனை ஏற்றுக்கொண்டு சட்ட நிர்ணய சபையில் அதற்குச் சாதகமாக வாக்களித்த அத்தனை தமிழர்களும் 1947ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்கள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு. நல்லையா ஒருவர் புறநீங்கலாக. அதற்குப் பரிசாக ஐக்கிய தேசியக் கட்சி அவருக்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சர் பதவியைத் தந்தது. ஆயினும், சொற்ப காலத்துக்குள் அவமானப்படுத்தப்பட்டவராக மிகுந்த மனவேதனையுடன் அவர் தமது மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அதே போன்று தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களையும் தனது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கொத்தலாவலை அரசாங்கம் அவர் தமது மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட 48 மணித்தியாலத்துக்குள் தானே அவரது ராஜினாமாவைக் கோரியதன் மூலம் தமிழ் மக்களின் முதுகில் குத்தியது.

தமிழ்மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சம அந்தஸ்து சதா காலத்துக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் அமரர் நல்லையாவுக்குப் பின் தபால் அமைச்சராகப் பதவி ஏற்றிருந்த அமரர் சு. நடேசப்பிள்ளையவர்கள்— களனியில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி என்ற தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, தீர்மானத்தின் மீது மக்கள் ஆணையைப் பெறுவதற்காகப் பாராளுமன்றத்தைக் கலைக்க ஐ.தே.க. எத்தனித்த வேளையில்— தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கருத்தாளம் மிக்க உரையில் "ஐக்கிய தேசியக் கட்சியில் ஐக்கியமும் கிடையாது, தேசியமும் கிடையாது" என இயம்பியது நினைவுதரத்தக்கது.

அதன் பின் சமூகசேவை அமைச்சராக அப்போது விளங்கிய சேர் கந்தையா வைத்தியநாதனையும் தம்மு

**டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம்**

டன் கூட டெல்லிக்கு அழைத்துச் சென்று அங்கு இந்தியப் பிரதமருடன் தாம் கைச்சாத்திட்ட இலங்கை இந்தியா சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறுவதற்குத் தகுதிபெற இங்குள்ள இந்திய வம்சாவழியினர் பிரதேச மொழியைப் படிக்கவேண்டுமென்ற வாசகத்தை அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை புகுத்தியிருந்ததும் அதனால் சேர் கந்தையா வைத்தியநாதனுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடமான நிலைமையும் நமக்குப் பாடமாக அமைய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களை நம்பியதால் இலங்கையின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தார் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் ஐயா அவர்கள். திரு. சிற்றம்பலம் அவர்களுடன் அமைச்சரவையில் சேர்ந்திருக்காவிட்டால் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்திருக்க முடியாது. பின் இலங்கையின் தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறிப்பதற்கான அடையாளம் எதுவும் அற்ற நிலையில் தனிச் சிங்கக் கொடியை ஐக்கிய தேசியக் கட்சி தேசியக் கொடியாக ஏற்றுக்கொண்ட போது தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நிரூபிப்பதற்காக தமது பதவியை அவர் ராஜினாமாச் செய்து நடைபெற்ற உப தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் அதனை நிறுவினார்.

இறுதியாக "டட்லி—செல்வா" கனவான்கள் உடன்படிக்கையின் பேரில் தேசிய அரசாங்கம்அமைக்க உதவிய தந்தை செல்வாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் இழைக்க வில்லையா? மாவட்ட சபையை நிறுவத்தவறியதுடன் நிறைவேற்றிய தமிழ் மொழி விசேட உபயோக சட்டத்தைக் கூட அமுல் செய்யாது விட்டதுடன், ஐ.நா. மனித உரிமைகள் வலியுறுத்தும் "தாய் மொழி மூலம் கல்வி போதனையைக் கூட மறுக்கவில்லையா? இன்னும் அதையேதான் புதிய அரசமைப்புத் திட்டத்திலும் சேர்த்துள்ளது.

ஆகவே, மந்திரி பதவி என்ற மாயமானைப் பின் தொடர்ந்து செல்வீர்களானால் இறுதியில் ஏமாற்றமே உங்களைக் காத்திருக்கும். எமது முன்னோர்கள் கற்ற படிப்பினை அது. ஐக்கிய தேசியக்கட்சியின் சரித்திரத்தில் அவர்களோடு சேர்ந்த எந்தக் கட்சியுமே உருப்பட்டது கிடையாது. இதனை எமது தலைவர்கள் உணர்ந்து தமிழ் ஈழம் மீட்கும் பணியில் தளபதி அமிர்தலிங்கம் அவர்களுக்குத் தோள் கொடுக்க உறுதிபூண முன் வருவார்களாக.

---

## கொழும்புத்துறையில் கருத்தரங்கு

த. வி. கூ. கொழும்புத்துறைக்கிளை நடாத்தும் கருத்தரங்கு.

நாள்: ஞாயிறு 3-9-78.

இடம்: 74, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை.

தலைவர்; திரு. ஜே. எஸ். அழகையா,

பேச்சாளர்கள்: திரு. வ. பொன்னம்பலம், திரு. ஈழவேந்தன், திரு. கோவை மகேசன், அருட்திரு சர்வானந்தா, அருட்திரு மகேந்திரன் இராசநாயகம், வெ. யோகேஸ்வரன் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை பா. உ.

★

## கருத்தரங்கு

திகதி: 2-9-78 சனிக்கிழமை,

நேரம்: மாலை 6மணி.

இடம்: "மங்கலமனை" (தலைவர் இல்லம்); முள்ளி ஒழுங்கை; ஆனைக்கோட்டை.

தலைவர்: திரு. சி. ஆறுமுகம் (தலைவர் த. வி. கூ. ஆனைக்கோட்டைகிளை).

கலந்து கொள்பவர்கள்: ஈழவேந்தன், கோவை மகேசன், காசிஆனந்தன்.

---

## விடுதலை இயக்க வரலாற்று நூலை சிந்தனைச்சிற்பி வெளியிட்டார்


ஈழத் தமிழினத்தின் 1974ம் ஆண்டுவரைக்குமான முப்பதாண்டுகால விடுதலைப்போராட்ட வரலாற்று நூலான "தமிழரசு வெள்ளி விழா மலர்" 27-8-78ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தலைவர் அமிர் பிறந்தநாள் விழாவின்போது சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த மலரின் முதலாவது பிரதியை டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கமும், இரண்டாவது பிரதியை திரு. வேலாயுத பிள்ளையும் வாங்கினர்.

1949ம் ஆண்டு முதல் தமிழரசுக்கட்சி நடத்தியமாநாட்டுத் தலைமையுரைகள், தீர்மானங்கள், சிங்கள அரசுகளுடன் காலத்துக்கு காலம் செய்யப்பட்ட உடன்படிக்கைகள், பல்வேறு போராட்டங்கள், இயக்கவரலாறு, இயக்கத்தையொட்டிய கட்டுரைகள், விளக்கப்படங்கள் —இவ்வாறு பல அம்சங்களுடன் முகிழ்த்த இந்த மலர் ஓர் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழுகிறது.

விலை பிரதியொன்று ரூபா இருபத்தைந்து. வேண்டுவோர் வி. தர்மலிங்கம் பா. உ. 238, பிரதானவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்பு கொண்டு நூலைப்பெற்றுக் கொள்ளலாம்.

---

## லண்டனில் 'ஈழம்' மாநாடு



அண்மையில் லண்டனில் நடைபெற்ற ஈழம் ஆராய்ச்சி மாநாட்டின் ஓர் அங்கமாக லண்டன் யூனிவேர் சிற்றிக் கல்லூரியில் "மனிதவுரிமைகளும் சுயநிர்ணயமும்" என்ற தலைப்பில் உலகப் புகழ் பெற்ற 'கார்டியன்' பத்திரிகையாளர் திரு. மார்ட்டின் வோக்கர் (MARTIN WALKER) உரையாற்றுவதையும் வழக்கறிஞர் ஏ. ஆசீர்வாதம் அருகேயிருப்பதையும், "லண்டன் ஸ்கூல் ஆப் எக்கனமிக்ஸ்"இல் நடைபெற்ற "சிறீ லங்காவின் பிரச்சினைகள் வர்க்கப் போராட்டமா அல்லது இனப் போராட்டமா?" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் டாக்டர் சிறீபத்மநாதன் கட்டுரை வாசிப்பதையும் அரு[illegible] ஆசிரியர் TONY GILBERT அமர்ந்திருப்பதையும் [illegible] காணலாம்.

---

## திருமண அழைப்பு

நிகழும் கலாயுத்தி ஆண்டு ஆவணித் திங்கள் 18ம் திகதி (3.9.78) ஞாயிறுக் கிழமை இரவு 11.15க்கு மேல்வரும் இடப லக்கன சுபவேளையில்

| | |
|---|---|
| இணுவில் தெற்கு<br>க. விநாசித்தம்பி<br>அவர்களின்<br>திருநிறை செல்வன்<br>**தில்லையம்பலம்**<br>அவர்கட்கும் | இணுவில் மேற்கு<br>க. வேலுப்பிள்ளை<br>தம்பதிகளின்<br>திருநிறை செல்வி<br>**பத்மாதேவி**<br>அவர்கட்கும் |

இணுவில் கந்தசாமி கோவில் மண்டபத்தில் திருமணம் நிகழ இருப்பதால் அத்தருணம் அதில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியருளும்படி உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

கொண்டாட்டம் மணமகள் இல்லத்தில் 4நாட்கள் நடைபெறும்

இங்ஙனம்,
வி. கணேசதாசன்,
(மணமகனின் சகோதரர்)
க. வேலுப்பிள்ளை தம்பதிகள்

இணுவில் மேற்கு.
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தீண்டாமையை அறவே ஒழித்துக்கட்டாவிடின் ஈழத் தமிழினத்துக்கு தலைமை தாங்குவதற்கு எமக்கு அருகதையில்லை"

## சமூக குறைபாடுகள் ஒழிப்பு மாநாட்டில் கூட்டணித் தலைவர் சிவா உரை!

"தீண்டாமை, சாதிப்பாகுபாடு, மற்றும் சமூகக் குறைபாடுகளை ஒழித்துக் கட்டி ஒன்றுபட்ட தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க நாம் உறுதிபூண்டு இருக்கிறோம்; அந்தப்பணியிலே ஈடுபட்டிருக்கிறோம். இவர்கள் இதற்கு முன் இவ்வாறு எத்தனை தடவை கூறிவிட்டார்கள்; இவர்களால் இது முடிகிற காரியமா என்று சிலர் நையாண்டி பண்ணுகிறார்கள். இது நமது ஆத்ம பரிசோதனைக்கு விடப்படும் ஒரு சவாலாகும். இந்தப் புனிதப்பணியிலே நாம் வெற்றிபெற முடியவில்லையென்றால் — சாதிவேறுபாடுகளற்ற தமிழ் சமுதாயத்தை உருவாக்க நம்மால் முடியவில்லையென்றால் — தமிழினத்துக்கு தலைமை தாங்கும் தகுதிநமக்கு இல்லையென்பதே பொருளாகும். நிச்சயமாக நாம் இந்தப் பிரச்சினையில் வெற்றி கண்டே தீருவோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முழு நிர்வாக இயந்திரமும் சமூகப் பாகுபாடுகளை ஒழித்துக் கட்டுவதற்காகப் பயன் படுத்தப்படும்; தேவைப்படும்போது சட்டத்தின் உதவியும் நாடப்படும்"

—இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில் பேசுகையில் ஆணித்தரமான குரலில் தெரிவித்தார்.

கூட்டணியின் மூலக்கிளைகளின் உறுப்பினர்கள்கலந்து கொண்ட இந்த மாநாட்டை திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் இயங்கும் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக் குழு ஏற்பாடுசெய்திருந்தது. 27-8-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்ற இம்மாநாட்டுக்கு திரு. வி. என். நவரத்தினம் பா. உ, தலைமை வகித்தார்.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. வி. என். நவரத்தினம் பா. உ. கூறியதாவது:—

"சாதியே அற்ற ஒரு சமுதாயமாக — சாதியென்றால் என்னவென்பதே தெரியாத ஒரு சமுதாயமாக — தமிழ் சமுதாயம் உருவாகவேண்டுமென்பதே கூட்டணியின் கொள்கையாகும். ஆனால் அதற்கு முன் பிறப்பினால்— சாதியின் பெயரால் — தற்போது கடைப்பிடிக்கப்படும் ஏற்றத்தாழ்வுகளை — இழிவான பாரபட்சங்களை — காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ம் திகதிக்கு முன்னர் ஒழித்துக் கட்டுவதென்று நாம் உறுதி பூண்டுள்ளோம்.

நமது இனத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக தடைக்கல்லாக இந்தச் சாதிப்பாகுபாடுகள் இருந்து வருவதுமட்டுமல்ல, மாற்றார் நமது இனத்தை அவமதிப்பதற்கும் இதுவே காரணமாக இருந்து வருகிறது. சாதி வேறுபாடு, தீண்டாமையெனும் தொழுநோய் தமிழ் சமுதாயத்திலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். இந்தப் புனிதமான பணியிலே இறங்குவது ஒவ்வொரு கூட்டணித் தொண்டனின் கடமை. கூட்டணித்தொண்டர்கள் மனம் வைத்தால் ஆகாததொன்றில்லை.

சாதிப்பாகுபாடு காட்டுபவர்களுக்கு கூட்டணியில் இடமில்லை; கூட்டணி விருப்பவர்கள் சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிப்பார்களானால், அவர்கள்மீது நடவடிக்கையெடுப்போம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனது ஆலயத்தைத் திறந்துவிட மறுக்கும் ஓர் ஆலய தர்மகர்த்தா, கூட்டணியின் கிளைத் தலைவராகவும் இருக்க முடியாது. கூட்டணியின் கொள்கைக்கு அமைந்து அவர் நடக்கவேண்டும் — இன்றேல் அவர் கூட்டணியிலிருந்து தூக்கியெறியப்படுவார்.

நாம் ஏதோ வேடிக்கை காட்டுவதற்காக இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை! உரிமை மறுக்கப்பட்டுள்ள தமிழ்ச்சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் வேதனைக் கண்ணீரைத் துடைக்க முயற்சிக்கிறோம்;

"சாதி இப்போது பாதி அழிந்துவிட்டது; மீதியும் காலப்போக்கில் ஒழிந்துவிடும்; இதற்காக இப்போது இயக்கம் ஏன் என்று சிலர் கேட்கிறார்கள். உண்மையில் தொடர்ந்து சாதி இருக்க வேண்டுமென்று நினைப்பவர்களே இப்படிக் கேட்கிறார்கள். இவர்களே இந்த இயக்கத்தின் விரோதிகள்.

அக்டோபர் 2க்குமுன் தமிழ்ஈழ மண்ணிலிருந்து சாதிப்பாரபட்சங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டேயாகவேண்டும். காந்திபிறந்த நாளன்று எமது தலைவர் அமிர்தலிங்கம் எங்கிருந்தாலும் அங்கிருந்தபடியே தமிழீழத்தில் சாதிப்பாகுபாட்டை ஒழித்துவிட்டோம் என்று பிரகடனப்படுத்தக் கூடிய அளவில் கூட்டணி உறுப்பினர்கள் இதுவிஷயத்தில் விரைந்து செயற்பட வேண்டும்.

"இந்தப் பிரச்சினையில், சமாதான முயற்சிகள் சரிவரா விட்டால் சட்டத்தின் உதவியை நாடுவோம். எப்படியும் இந்தத் தீமையை ஒழித்துக்கட்டியே தீருவோம்!"

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ. தமது பேச்சில் கூறியதாவது:—

"சாதி வேறுபாடு, சமூகக் குறைபாடுகளின் ஒரு அடிப்படைக்காரணம், வறுமையாகும். தியாகி சிவகுமாரன் பிறந்தநாள் விழாவிலே, அவனது சமாதிக்குப் படைக்கப்பட்ட உணவைப் பெற்றுக்கொள்வதற்கு போட்டி போட்டுக்கொண்டு சிறுவர்கள் சிலர் நின்றதைக் கண்டேன். அதைப்பார்த்த போது என் கண்கள் குளமாகின. வறுமைப்பேயை ஒழித்துக்கட்ட வேண்டும். தமிழர்கள் ஒருவரையொருவர் சாதிப்பெயர் கூறி அழைப்பதைக் கைவிட வேண்டும். முக்கியமாகக் கூட்டணி உறுப்பினர்கள் எந்த ஒரு இடத்திலும் சாதிப் பெயர்களைக் கூறிப் பேசக்கூடாது."

உடுப்பிட்டி பா. உ. திரு. இராசலிங்கம் பேசுகையில்— "உடுப்பிட்டித் தொகுதியில் சாதி வேறுபாட்டுக்கு கிடைத்த மரண அடி நின்று நிலைக்கவேண்டுமானால்சாதிவேறுபாடுகளைப் பூண்டோடு களைய வேண்டும். சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி, ஒரு சமதர்மத் தமிழீழத்தை நிறுவ நாம் உழைக்கவேண்டும். தமிழர் மத்தியில் இருக்கும் சாதிவேறுபாட்டைப்பெரிதுபடுத்த முயலும் சிங்கள அரசின் முயற்சிக்குப் பலியாகாது, தீண்டாமையையும் சாதிவேறுபாடுகளையும் முற்றாக ஒழித்துக்கட்டுவோம்" என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழ் மகளிர்பேரவையின் சார்பில் பேசுகையில் —சாதியொழிப்பு நடவடிக்கைகளுக்கு தமிழ் மகளிர் பேரவை பூரண ஆதரவை நல்குகிறதென்றும், சாதிவேறுபாடுகளற்றமுறையில் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த 12வயதுக்குட்பட்டசின்னஞ்சிறு குழந்தைகளைத் திரட்டி கூட்டுப்பிரார்த்தனை நடத்துவதன்மூலம் ஏற்றத்தாழ்வு உணர்வுகளை அகற்றலாமென்றார்.



சுதந்திரன் ஆசிரியர் கோவைமகேசன் பேசுகையில்— "ஏதோ வலுக்கட்டாயத்துக்காகவோ, நெருக்கடிக்காகவோ வேண்டா வெறுப்புடன் அருவருப்புடனேயோ சட்டத்துக்குப் பயந்தோசாதிப்பாகுபாடுகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் கைவிடச்செய்வதைவிட, உண்மையின் மனமாற்றத்தின் மூலம், சாதியென்ற உணர்வையே மக்களின் மனத்திலிருந்து வேரோடழிப்பதன் மூலம் தான் ஒரு சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கமுடியுமென்றும், தமிழனது வரலாற்றிலும் சரி, சைவசமயத்திலும் சரி, சாதிக்கு இடமேயில்லையென்றும் எடுத்துரைத்தார்.

திரு. த. சந்ததியார் பேசுகையில், சாதியை ஒழித்துக் கட்டும் ஆற்றல் புரட்சிகர எண்ணங்கொண்ட இளைஞர்களாலேதான் முடியுமென்றார்:

வண்ணை ஆனந்தன் பேசுகையில், சாதியொழிப்பு பற்றி மதஅடிப்படையிலும் பிரசாரம் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும், நல்லை ஆதீனம் போன்ற சைவ ஆதீனங்களையும் இது சம்பந்தமாக நாம் அணுகவேண்டுமென்றும், கோவில்களில் இடம்பெறும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்கு பிராமண சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராசா பேசுகையில் — சமதர்மத் தமிழீழ அரசு உருவாகும் போதே சாதிபேதமற்ற சமுதாயமாக தமிழ் சமுதாயம் விளங்க வேண்டுமென்றும், தமிழீழம் மலர்வதற்கு முன் சாதிக்கு சாவுமணியடிக்கப் பட வேண்டுமென்றும் கூறினார்.

300க்கு மேற்பட்ட மூலக்கிளைகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில்பங்குகொண்டனர்.

---

— 2-ம் பக்கத் தொடர்

தைப் போல, ஜெர்மன் மொழியைப் பேசுகிற நாடு ஜெர்மன் நாடு என்று ஆனதைப் போல, தமிழ் மொழி பேசுகிற நாடு தமிழ் நாடு என்று ஆனதைப் போல இந்தி மொழி இந்தியா முழுவதும் பேசப்படுவதால் இது இந்தியாவாக ஆயிற்று என்று யாரும் வாதிட முடியாது. அதற்கு அடிப்படையே கிடையாது. ஏனென்றால் 'இந்து' என்பதிலிருந்து 'இந்தியன்' வந்தான்.

எனவே 'இந்தியா' என்பது 'இந்தி' என்ற மொழியின் அடிப்படையில் வந்தது அல்ல. ஆகவே, இந்தி மொழி இந்தியா முழுமைக்கும் சொந்தமான ஒரு மொழி அல்ல.

இந்திமொழியை இந்தியா முழுவதும் பரப்ப வேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்றால் அதற்கு அவர்கள் சொல்கிற ஒரேஒரு காரணம், இந்தியாவினுடைய ஒருமைப்பாடு கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமேயானால், இந்தியாவினுடைய ஒற்றுமை குலையாது இருக்க வேண்டுமேயானால் அனைவருக்கும் தொடர்பு மொழியாக இந்தி மொழி இருந்தாக வேண்டும் என்று கூறுகிறார்கள். நாம் அதே காரணத்தைத்தான் கூறுகிறோம். இந்தியாவினுடைய ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமேயானால் இந்தியா பல துண்டுகளாக ஆகிவிடாமல் இருக்க வேண்டுமேயானால் இந்தியை நீங்கள் [illegible] தான் சொல்கிறோம். நாம் எடுத்து வைப்பதும் அதே வாதம்தான்.

### பல தேசிய இனங்களின் தாயகம் இந்தியா

இந்தி நுழைக்கப்பட்டால் தான், இந்தி பரவினால்தான் இந்தியா ஒன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். நான் கூறுகிறேன், அழகான உயர்ந்த கோபுரத்தில் காக்கை எச்சமிடுகிறது அது அலட்சியப்படுத்தப்பட்டு விடும். அந்த எச்சத்திலே இருக்கிற விதை முளைக்க ஆரம்பிக்கும். பிறகு வேர் விடும். மரமாகும். ஒருநாள் கோபுரத்தைப் பார்த்தால் வெடித்துக் கிடக்கும். அதைப் போலத்தான் இந்தி என்ற வேர் பரவுமேயானால் இந்திய ஒருமைப்பாடு என்ற கோபுரம் இடிந்து சுக்கு நூறாக ஆகிவிடும் என்பதை இந்திய நாட்டுப் பிரதமருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா ஒரே தேசிய இனத்தைக் கொண்ட நாடு அல்ல. பல தேசிய இனங்கள் இந்தியாவிலே இருக்கின்றன! அதிலே தமிழ் இனம், தமிழர் என்ற தேசிய இனம் நமது இனம். நாம் திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்கிற நேரத்தில் தமிழோடு சேர்ந்த குடும்ப மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய இந்த மொழிகள் எல்லாம் இணைந்து— இந்த குடும்ப மொழியைப் பேசுகின்ற இந்தப் பகுதி திராவிடம், அதில் உள்ளவர்கள் திராவிடர்கள், நாம் இனத்தால் தமிழர்கள். நம்முடைய குடும்ப மொழிகளான தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்குஆகிய இந்த நான்கு மொழிகளைப் பேசுவதால் திராவிடர்கள். நாட்டால் இந்தியர்கள் அவ்வளவுதான். நாம் திராவிட நாடு கேட்ட போது கூட நான்கு மொழிகளும் பேசுகிற திராவிடக் கூட்டாட்சிதான் கேட்டோம்! ஒற்றையாட்சி முறையல்ல என்பதை தமிழ் இன மக்கள் மறந்து விடக் கூடாது.

எனவே நாம் தமிழ் இனம், நாட்டால் இந்தியர்கள், எனவே இந்தி மொழி பரப்பப்பட்டு, மற்ற மொழிகளெல்லாம் அடியோடு அழிக்கப்பட்டு, இந்தி ஆதிக்கம் தலைதூக்குமேயானால் அதற்குப் பிறகு நாம் குமரி அனந்தன் இங்கே குறிப்பிட்டதைப் போல் இரண்டாந்தர மக்களாகக் கூட அல்ல, நாலாந்தர, மக்களாக ஆக்கப்பட்டு விடுவோம்; அதை தயவுசெய்து நீங்கள் மறந்து விடக்கூடாது.

40 ஆண்டுக் காலமாக இந்தியை எதிர்த்து நடைபெற்று வந்திருக்கிற இந்த போராட்டம் சாதாரணமாக நடத்தப்பட்ட போராட்டமல்ல. இந்தப் போராட்டத்திலே தங்களுடைய இன்னுயிரை ஈந்தவர்கள் நூற்றுக் கணக்கானவர்கள். துப்பாக்கி ரவைகளுக்குப் பலியானவர்கள், மாணவர்கள், தீக்குளித்துச் செத்தவர்கள் செந்தமிழர்கள்!— மதத்தைக் காக்க வியட்நாமிலே தீக்குளித்துச் செத்தார்கள் என்ற வரலாறு உண்டு— ஆனால் மொழியைக் காக்க எட்டு பேர் தங்கள் தேக்கு மரத்தேகங்களுக்கு தீ வைத்துக் கொண்டு செத்தார்கள் என்றவரலாறு தமிழ் நாட்டுக்கு மாத்திரமே உரிய தனி வரலாறு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

## ஆண்டுக்கூட்டம்

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் பதினேழாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 4-9-78 திங்கட்கிழமை காலை 9 மணியளவில், கிளிநொச்சி பட்டினசபை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. கு. டே. செல்வராசா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.




சம்பூரண சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள். ஒரு கட்டியின் விலை -60 சதம் மட்டுமே. மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்

## நண்பர்கள் தேவையா



தோழர் - தோழியர்களின் விலாசங்களும், படங்களுடன் நட்புறவு விபரங்களடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ள விண்ணப்பியுங்கள்:

Chandrodaya Penpals
Bulletin
Janatha Book Depot.
Borella, Colombo-8,

## இப்பொழுது விற்பனையாகிறது!

முதறிஞர்
தந்தை செல்வா
அவர்களின்
நினைவு மலராக
அன்னரது அழகிய
வண்ண
முகப்போவியத்துடன்

சுடர்
CHUDAR

சித்திரை-வைகாசி
இதழ்
விலை ரூபா ஒன்று

## திருகோணமலையில் சாகச விளையாட்டுக்கள்

ஆரையம்பதியைச் சேர்ந்த இரும்பு மனிதன் சாண்டோ வே. சிறீதாஸ் அளிக்கும் சாகச விளையாட்டுக்கள் 3-9-78 மாலை 6 மணிக்கு திருகோணமலை முற்றவெளியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியின்போது சாண்டோ சிறீதாசுக்கு 'மகாபராக்கிரமன்' எனும் கௌரவ பட்டமும் வழங்கப்படவுள்ளது.

## சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## கிங்ஸ்லி (கொழும்பு)
3-வது வாரம்

சிவாஜி கணேசன், ஜமுனா
— நடித்த —
### பொம்மைக் கல்யாணம்

## விஜயா (மட்டுநகர்)
7-வது வாரம்

சிவாஜி நடித்த—
### உத்தமன்
— கலர் —

## கெப்பிட்டல்
2-வது வாரம்

### பால நாகம்மா

## பிளாஸா
2-வது வாரம்

- எம். ஜி. ஆர். நடித்த -
### தாய்க்குத் தலைமகன்
(புதிய கொப்பி)

## லிடோ (யாழ்நகர்)
3-வது வாரம்

### தீர்க்க சுமங்கலி
(புதிய பிரதி)

## செல்லமகால்
4-வது வாரம்

எம். ஜி. ஆர், சரோஜாதேவி,
மனோகர், ஜெயலலிதா,
நம்பியார் நடித்த-
### அரச கட்டளை
(புத்தம் புதிய கொப்பி)

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]
2-வது வாரம்

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
- நடித்த -
### தாய்க்குத் தலைமகன்

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் இலங்கை நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு செப்டம்பர் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, அச்சுப்பதிப்பு ... அச்சகம், பிரதானவீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org